பக்கங்கள் 18 + 05

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## கத்தியால் குத்தப்பட்டு குடும்பஸ்தர் கொலை!

**தர்மபுரத்தில் சம்பவம்**

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியைப் பார்வையிட்டு விட்டு 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 23 வெள்ளிக்கிழமை 05.04.2024 அதிர்வு 249



திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இன்றைய வழக்கு விசாரணையைத் தொடர்ந்து திருக் கோணேஸ்வரர் ஆலயத்தில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்டபோது...

# தமிழரசுக் கட்சி வழக்கு ஏப். 24 க்கு ஒத்திவைப்பு

## சுமந்திரன் தவிர்ந்த ஏனைய எதிராளிகள் தங்கள் ஆட்சேபனைச் சமர்ப்பிப்பதற்காக

(எஸ். கீதபொன்கலன்)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்துக்கு எதிராக அதன் உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கில் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. தவிர்ந்த ஏனைய எதி ராளிகள் அறுவரும், தங்களின் ஆட்சேப னைகளை எழுத்தில் சமர்ப்பிப்பதற்காக கால அவகாசம் கோரியமையை அடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கி அந்தத் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது நீதிமன்றம். 04▶

**நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில்**

## அகிலனுக்கு அழைப்பாணை



இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் அந்த வழக்கு தொடர்பான செய்திகளை வெளியிட்டுள்ள 'புதிய சுதந்திரன்' என்ற இலத்திரனியல் பத்திரிகையின் பிரசுரிப் 04▶

## எது நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ அந்தத் துரதிர்ஷ்டம் நடந்தமை கவலை

**ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா விசனம்**
**சுமந்திரனின் நிலைப்பாடு குறித்து எரிச்சல்**



"நாம் எது நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ, துரதிஷ்டவசமாக அதுவே நடந்து விட்டது. அது கவலைக்குரியது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான இன்றைய வழக்கு விசாரணையின் பின்னர் நீதிமன்றத்துக்கு வெளியில் 04▶



# கீரிமலையில் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது காணி அளவீடு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியை அளவீட்டுப் பணி மேற்கொள்வதற்காக வந்த நில அளவைத்திணைக்களத்தினர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் கடும் எதிர்ப்பால் திரும்பிச் சென்றனர்

இன்று காலை 9 மணியளவில் கீரிமலை ஜனாதிபதி மாளிகை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியை அளவீடு செய்யும் நோக்கில் பொதுமக்களுக்கு அறிவிக்காமல் இரகசியமான முறையில் நில அளவை திணைக்களத்தினர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் வருகைதந்தனர்.

இந்தநிலையில் அவர்களை உட் செல்லவிடாது பொதுமக்கள் தடுத்து நிறுத்தியதோடு தமது காணிகளை விடுவிக்குமாறும், தமது சம்மதம் இல் லாமல் காணிகளை அளவீடு செய்யக் கூடாது எனவும் கோரி எதிர்ப்பை வெளியிட்டனர்.



கடும் எதிர்ப்பையடுத்து நில அளவைத்திணைக்களத்தினர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் திரும்பிச் சென்றனர்.

காணி உரிமையாளர்கள், பொது மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத் தரணி க.சுகாஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.









# வவுனியா பாடசாலையில் மாணவன் மீது ஆசிரியை தாக்குதல்: மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணை முன்னெடுப்பு

(கே.வசந்தன்)

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவன் மீது ஆசிரியர் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.



வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவன் கடந்த புதன்கிழமை பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்ற பின், சிறுவனின் முகத்திலும் தலையிலும் அடிகாயங்கள் காணப்பட்டதையடுத்து பெற்றோர் சிறுவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியை தாக்கினார் என்று தெரிவித்துள்ளான்.

இதையடுத்து பெற்றோர் சிறுவனை நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்ததுடன், சிறுவன் சிகிச்சை பெற்று வருகின்றார். சிறுவனின் நெற்றியில் காயமும், தலை மற்றும் கண் பாதிப்படைந்துள்ளன எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

உங்கள் மகனுக்கு அ, ஆ தெரியவில்லை என்றும், அதனாலேயே தான் அடித்தார் என்றும், அடிக்கும்போது சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் அடிபட்டுவிட்டது என்றும் மேற்படி ஆசிரியர் பெற்றோருக்கும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் எவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைப் பதியாத போதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தினர், சொந்தப் பிரேரணை மூலம் இந்த விடயத்தைக் கவனத்தில்கொண்டு வந்தமையுடன் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலைக்கு நேரடிக் கள விஜயம் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவனிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டமையுடன் தொடர்ச்சியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# நடிகை தமிதாவுக்கு விளக்கமறியல்

## கணவரும் கம்பி எண்ணுகின்றார்



நிதி மோசடியில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட பிரபல சிங்கள நடிகையான தமிதா அபேரத்னவையும் அவரது கணவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப் படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தென்கொரியாவுக்கான விசா பெற்றுத் தருவதாகக் கூறி, 30 இலட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டனர் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேநபர்கள் நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் நித்திரைக்குச் சென்றவர் மயங்கிய நிலையில் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நித்திரையில் மயக்கமுற்றவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபமாலை செல்வராசா (வயது 45) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இரவு தூங்கியவர் மறுநாள் காலை 7 மணியாகியும் தூக்கத்தால் எழும்பாததால், வீட்டார் அவரைத் தொட்டு எழுப்ப முயன்றபோது, அவர் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

அதனையடுத்து வீட்டார் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கத்தியால்...

திரும்பிச் சென்றபோது வீதியில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாகக் கத்தியால் பல தடவைகள் பலமாகக் குத்தப்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 30 வயதுடைய சவரிமுத்து ஜோன் பற்றிஸ் (வயது 30) என்ற குடும்பஸ்தரே கத்திக் குத்துக்கு இலக்காகிய நிலையில் தர்மபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

கத்திக் குத்துக்கு இலக்காகி இறந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைத் தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எது நடக்கும்...

கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா.

இந்த வழக்கில் எதிராளிகளான சிறீதரன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்பியான யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவ ராசா நீதிமன்றில் இன்றும் முன்னிலையானார்.

இன்றைய வழக்கில் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இந்த வழக்கு தொடர்பில் தமது ஆட்சேபனையைச் சமர்ப்பணமாக எழுத்தில் நீதிமன்றத்தில் இன்று சமர்ப்பித்ததையே இவ்வாறு விசனத்துடன் சுட்டிக்காட்டினார் தவராசா.

"சில விட்டுப்புக்கொடுப்புக்களைக் கொடுத்து, கட்சியை நிமிரச் செய்வதற்காகச் சில விடயங்களைக் கடந்த தவணையின்போது நாம் முன்னெடுத்தோம். நாம் எது நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ துரதிஷ்டவசமாக அதுவே நடந்து விட்டது. இன்று யாராவது எதிராளி வந்து ஆட்சேபனை தெரிவிக்காமல் இருந்திருந்தால் இன்று வழக்கு முடிவடைந்து இருக்கலாம். ஆகவே, எதை நாம் எதிர்பார்த்தோமோ அது நடந்து விட்டது. அது மிகவும் கவலைக்குரிய விடயம். எதிர்வரும் 24ஆம் திகதி நாம் ஆட்சேபனை சமர்ப்பிக்க வேண்டும். அதைச் சமர்ப்பிப்போம்." – என்றார் தவராசா.

## நீதிமன்ற...

பாளர் அகிலன் முத்துக்குமாரசுவாமி என்பவரை நீதிமன்ற அவமதிப்புக் குற்றசாட்டின் பேரில் எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகும்படி அழைப்புக் கட்டளை பிறப்பிக்க திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் செய்த முறைப்பாட்டின் பேரில் இந்த அழைப்பு கட்டளையை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

"நேற்றும், இன்றும் அந்தப் பத்திரிகையில் வெளியான செய்திகள் பற்றி நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினேன். 'சுமந்திரனுக்கு இரண்டு தெரிவுகள்தான் உண்டு. அதில், அவர் மற்றவர்களுடன் இணங்கி இன்றைக்கே வழக்கை முடித்துக் கொண்டால் கட்சி நன்மை பெறும். இல்லாவிட்டால் – அப்படி அவர் செய்யாவிட்டால் – அது கட்சியை இழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும்' என்று குறிப்பிட்டுள்ளார். அது சம்பந்தமான வேறு கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார். நிலுவையில் வழக்கு ஒன்று இருக்கையில், அதிலே கட்சிக்காரர் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு நீதிமன்றமே அவகாசம் கொடுத்திருக்கின்ற போது, குறித்த நிலைப்பாட்டையே அவர் எடுக்க வேண்டும் என்று பொதுவெளியில் கூறி, அவருக்கு அழுத்தம் கொடுப்பது நீதி நிர்வாகத்தைப் பரிபாலிக்கின்ற செயற் பாட்டைப் பாதிக்கும் நடவடிக்கை என்று நீதிமன்றத்தில் முறையிட்டேன். அதன் அடிப்படையில் அவருக்கு அழைப்புக் கட்டளை அனுப்பப்படு கின்றது." – என்று சுமந்திரன் பின்னர் தெரிவித்தார்.

## தமிழரசுக் கட்சி...

திருகோணமலை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, ஏழு எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் தமது தரப்பு ஆட்சேபனைச் சமர்ப்பணங்களை எழுத்தில் சமர்ப்பித்தார். ஏனைய எதிராளிகள் தமது ஆட்சேபனை சமர்ப்பணங்களை சமர்ப்பிக்காத நிலையில் தாங்களும் அதனை முன்வைப்பதற்குக் கால அவகாசம் கோரினர். அதற்கு அவகாசம் வழங்கி வழக்கை 24ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிராளியான சுமந்திரன் முதல் தடவையாக நீதிமன்றில் முன்னிலையானார். அவர் தமக்காகத் தாமே சமர்ப்பணம் செய்தார்.

கடந்த 17ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் அரசியல் குழு, கட்சியின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் வெளிப்படுத்தும்படி தம்மை வழிப்படுத்தி இருப்பதால் அதன் அடிப்படையில் தான் இந்த ஆட்சேபனைச் சமர்ப்பணங்களை முன் வைக்கின்றார் என சுமந்திரன் தெரிவித்தார்.

வழக்காளி கட்சி மீது சுமத்திய குற்றச்சாட்டுகளையும் தவறுகளையும் அப்படியே ஏற்றுக்கொள்வது கட்சியின் முடிவல்ல என்பதையும், கட்சியின் உண்மையான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும்படி அரசியல் குழு தன்னை வழிப்படுத்தி இருக்கின்றது என்றும் சுமந்திரன் நீதிமன்றத்தில் சொன்னார்.

வழக்காளியின் குற்றச்சாட்டுகளையோ, அவர் கோரிய நிவாரணங்களையோ தம்மால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்ட சுமந்திரன், வழக்கை விரைந்து முடிப்பதற்காக எல்லாவற்றையும் தவறு என்று ஏற்றுக் கொள்ளும் சில எதிராளிகளின் நிலைப்பாடு கட்சியினுடைய நிலைப்பாடு அல்ல என்றும், அதனால்தான் பல விடயங்களைத் தெளிவுபடுத்தித் தான் ஆட்சேபனைச் சமர்ப்பணமாக முன் வைத்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

இதே நேரம் வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரான செல்லையா இரத்தினவடிவேல் தமது சட்டத்தரணி ஊடாக விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இந்த வழக்கில் கட்சியினர் நேரடியாக இணைய முடியும் என்ற நீதிமன்ற அறிவுறுத்தலுக்கு அமைய தம்மையும் இந்த வழக்கில் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொள்ளும்படி அவர் கோரினார்.

கட்சி சார்ந்த பொது நலன் வழக்கு என்பதால் கட்சி உறுப்பினர் ஒருவர் வழக்கில் இணைவதைத் தாம் ஆட்சேபிக்கவில்லை என்று சுமந்திரன் குறிப்பிட்டார். வழக்காளியும், ஏனைய எதிராளிகளும் இந்த உறுப்பினரின் விண்ணப்பம் தொடர்பில் ஆட்சேபனை ஏதும் தங்களுக்கு இருக்குமாயின் அதனைத் தெரிவிப்பதற்கு கால அவகாசம் கோரியதனால் அதற்கும் 24ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

நீதிமன்றுக்கு வெளியில் இன்றைய அமர்வு குறித்து கருத்து வெளியிட்ட சுமந்திரன் எம்.பி.,

"என்னைப் பொறுத்தவரை இந்த வழக்கு மிக விரைவில் முடிவுறுத்தப்பட வேண்டும் என்பதற்காக எனது முதல் பிரசன்னத்திலேயே நான் ஆட்சேபனைப் பத்திரங்களை தயாராக எடுத்து வந்து அணைத்து இருக்கின்றேன். மற்றைய தரப்பினரின் ஆட்சேபனைக்காகத்தான் வழக்கு ஏப்ரல் 24ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டிருக்கின்றது." – என்றார்



# குடிதண்ணீர் பெறுவதற்கு உதவி!

(தலவாக்கலை)

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட தலவாக்கலை சென் கிளையார் பாடசாலைக்கு சுத்தமான குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக தண்ணீர் இயக்கும் இயந்திரம் ஒன்றும் தண்ணீர் குழாய்களை பெற்றுக்கொள்வதற்கு 40 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டுள்ளது.

பழைய மாணவர்களால் இந்த உதவித் தொகை பாடசாலையின் அதிபர் தினகரனிடம் கையளிக்கப்பட்டது.



# உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

(எம்.ஏ.ஏ.அக்தார் )

அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பட்டியடிப்பிட்டியில் வசித்து வரும் பொருளாதார ரீதியில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கு ஜேர்மன் முஸ்லிம் ஹெல்பேஜ் நிறுவனத்தின் தலைவர் ஸாதிக் ஹஸன் நிதியில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பட்டியடிப்பிட்டி ஜும்மா பள்ளிவாயல் தலைவர் ஸிறாஜ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த கொரோனா காலத்தில் அஸீஸா நிறுவனம் 10 லட்சம் ரூபா பெறுமதியான புத்தாடைகளை பட்டியடிப்பிட்டி கிராமத்துக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இணையக் குற்றங்கள்

இலங்கை அரசு உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி ஒரு தலைப்பட்சமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய நிகழ்நிலைக் காப்புச் சட்டம் (இணையக் காப்புச் சட்டம்) குறித்த சர்ச்சை இன்னும் அடங்கவில்லை. நீடிக்கின்றது. அந்தச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் விரைவில் செய்யப்படும் என அரசு மீண்டும் உறுதி மொழி தந்திருக்கின்றது.

ஆயினும், இந்தச் சட்டத்தை என்ன நோக்கத்துக்காகக் கொண்டு வருகிறோம் என அரசு அப்போது சுட்டிக்காட்டியதோ அந்தப் பிரச்சினை இப்போது மேலும் தீவிரமடைந்து வருவது கவனிக்கப்பட வேண்டும்.

உண்மையில் இந்தப் பிரச்சினையைக் கையாளத்தான் அந்தச் சட்டத்தை அரசு கொண்டுவந்ததா அல்லது அரசுக்கு எதிரான கருத்துருவாக்கத்தை - மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை - அடக்கி, எதேச்சாதிகாரத்தைக் கட்டவிழ்த்து விட இந்த ஒடுக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு வந்ததா என்பது வேறு விடயம்.

ஆனால், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இணைய வழிக் குற்றங்கள் பெருகி வருகின்றன என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி.) கணினிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு 2023 ஆம் ஆண்டில் 5,243 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தர்ஷிகா ரணசிங்க தெரிவித்திருக்கின்றார்.

மார்ச் 2024 மூன்றாவது வாரத்தில் தனது பிரிவுக்கு 1,500 முறைப்பாடுகள் வந்துள்ளன எனவும், டிஜிட்டல் சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் அதனுடன் இணைய குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன எனவும் அவர் கூறினார்.

"கிட்டத்தட்ட அனைவரிடமும் ஸ்மார்ட்போன்கள் உள்ளன. மேலும் கல்வி நடவடிக்கைகளுக்கு ஸ்மார்ட்போன்கள் இன்றியமையாதன என்றாகிவிட்டதால், பெரும்பாலான சிறார்களும் அவற்றை அணுகலாம். பல சிறார்களுக்கு இணைய அணுகல் தாராளமாக உள்ளது. மேலும் பலரிடம் ஒன்றுக்கு மேற்பட்ட சிம்கள் உள்ளன. இது கொவிட் தொற்றுக்குப் பிறகு நாம் அவதானிக்கும் ஒரு போக்கு. மேலும் சாதனங்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், எங்களால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது" என்று தர்ஷிகா ரணசிங்க கூறும் விடயம் அவதானிக்கப்பட வேண்டும்.

இத்தகைய இணையக் குற்ற முறைப்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களில் 63 சதவீதம் பேர் பெண்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான முறைப்பாடுகளில் இணையத்தில் நிர்வாணபுகைப்படங்களை வெளியிடும் அச்சுறுத்தல்கள், இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் சமூக ஊடக கணக்குகள் அல்லது சாதனங்களை அங்கீகரிக்கப்படாத அணுகல் ஆகியவை அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"பல பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் கணக்குகள் 'ஹக்' செய்யப்பட்டுள்ளன. உங்களுக்கு அனுப்பப்பட்ட இணைப்பைக் கிளிக் செய்யும் போது இது வழக்கமாக நடக்கும். யாராவது உங்களுக்கு இணைப்புகளை அனுப்பும்போது மிகவும் கவனமாக இருங்கள்" - என்றும் தர்ஷிகா ரணசிங்க கூறினார்.

ஒவ்வொரு நாளும், சுமார் 200 போலிக் கணக்குகளை செயலிழக்கச் செய்யுமாறு பேஸ்புக் நிறுவனத்திடம் தாங்க கோருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையர்கள் இணையத்தில் பயன்படுத்தும் ஒரு முறை கடவுச்சொற்களை (OTP) மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தையும் கொண்டுள்ளனர். இது கடவுச்சொற்களைத் திருடவும், பணத்தை அபகரிக்கவும், அடையாளத் திருட்டில் ஈடுபடவும் நேர்மையற்ற தரப்புகளுக்கு வாய்ப்பளிக்கின்றது என்றும் அவர் கூறினார்.

மோசமான இணையக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே அருகில் உள்ள காவல் நிலையத்தை அணுக வேண்டுன். கணினிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திம அருமபெரும கூறுகின்றார்.

எது, எப்படியாயினும் சர்ச்சைக்குரிய - ஒடுக்குமுறை நோக்குக் கொண்ட - நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தவிர்க்க முடியாத கட்டாயம் என்ற கருத்தை உருவாக்கும் விதத்தில் இணையக் குற்றங்கள் சமூகத்தில் அதிகரித்து வருகின்றமை மோசமான நிலைமையாகும்.



# இலங்கை இராணுவத்தினரால் காத்தான்குடியில் வீடு கையளிப்பு

(பழுவூரான்)

இலங்கை இராணுவத்தினரால் மட்டக்களப்பு காத்தான்குடியில் நிர்மா ணிக்கப்பட்ட வீடு திறந்து வைக்கப்பட்டுப் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் 11 ஆம் சிங்க ரெஜிமன்ட் படை அணியின் கட்டளை யிடும் அதிகாரி மேஜர் டி .எம் .என். பத்மசிறியின் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் இராணுவ வீரர்களின் பங்களிப்பில் 243 ஆவது காலாட்படை அணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கே .எம். எஸ். குமாரசிங்கவின் அழைப்பின் பேரில் 24 ஆவது காலாட் படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் டபிள்யூ சந்திரசிறியால் இந்த வீடு திறந்து வைக்கப்பட்டது.



சமயத் தலைவர்களின் பிரார்த்தனை கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இந்த வீடு திறந்து வைக்கப்பட்டு வீட்டின் பயனாளிடம் கையளிக்கப்பட்டது.

இந்த வீடு காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதிய காத் தான்குடி 167ஏ வடக்கு கிராம சேவகர் பிரிவில் எம்.ஐ.மசாகிரா என்பவருக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வீட்டின் நிர்மாணப் பணிகளை மிகவும் துரிதமா கவும், விரைவாகவும் இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்த வீட்டைக் கையளிக்கும் நிகழ் வில் காத்தான்குடி நகர சபை முன்னாள் உறுப்பினர் கே.எல்.எம். பரீட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அம்பாறை கரையோரத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## அவதானமாக இருக்குமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை

( எம்.ஏ.ஏ.அக்தார்)


அம்பாறை மாவட்டத்தின் கரை யோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இத னால் பொதுமக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பொலிவேரியன் வீட்டுத் திட்ட கிராமம் மற்றும் கடற்கரையோரப் பிரதேசம் என்பவற்றில் அதிக நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அதனை கட்டுப்படுத்த பொது மக்கள் பூரண ஒத்து ழைப்பு வழங்குமாறும் சாய்ந்தமருது சுகாதார லைத்திய அதிகாரி டாக்டர் சகீலா இஸ்ஸடீன் தெரிவித்துள்ளார்.



தற்போது இடைவிட்ட மழை காலம் ஆரம்பித்துள்ளதால் நுளம்பு பெருகுவ தற்கு சாதகமான சூழலை தோற்றுவிக் கக்கூடும் என்ற காரணத்தினால் பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல் , நீர் தேங்கி நிற்கும் பொருள்கள் , நீர் தேங்கும் இடங்கள் , கடற்கரை யோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி , படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் தொழிற்படுமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்துக்கு கழிவுநீர் தேங்கியுள்ளதாகவும் இது குறித்து கல்முனை மாநகரசபையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள தாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.


வெற்றிகரமாக
10 ஆவது
ஆண்டில்
காலடி எடுத்து வைக்கிறது
ருபின்ஸ் வைத்தியசாலை
வடமராட்சி மக்களின் 24hrs ஆரோக்கிய காவலன்
உங்கள் நலமே
எங்கள் நோக்கம்
Ruhbins Hospital
Ruhbins Hospital (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94 77 248 6642

# காரைதீவு உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா பஷீரின் வழிகாட்டலின் கீழ் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதர்கள் இணைந்து பிரதேசத்துக்கு உட்பட்ட ஹோட்டல்களிலும் வீதியோரங்களிலும் பல்வேறுபட்ட உணவுகள் கையாளுதல் தொடர்பான பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டு இதுவரையான காலப் பகுதிகளில் குறைபாடு காணப்பட்ட 06 உணவு கையாளும் நிறுவனங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது என்று சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.






# நன்னீர் புகைக் கருவாடு பதனிடும் உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு

(மன்னார் செய்தியாளர்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலைப் பெருமாள் கட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவில் குருவில் கிராமத்தில் நன்னீர் புகைக் கருவாடு பதனிடும் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனால் இதுதிறந்து வைக்கப்பட்டது.

உலக உணவுத் திட்டத்தின் நிதிப் பங்களிப்புடன் நன்னீர் புகைக் கருவாடு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் குருவில் கிராமத்தில் நன்னீர் புகைக் கருவாடு உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளரால் அமைக்கப்பட்ட உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க.அரவிந்தராஜ், மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட உலக உணவுத் முகாமைத்துவ அலகு தலைமை அதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கிழக்கு மாகாண ஆளுநரால் வவுணதீவு வீதி திறந்து வைப்பு!

(நூருல் ஹுதா உமர்)

140 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு வீதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது. மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, திறன் விருத்தி, மகளிர் அபிவிருத்தி, நீர் விநியோகத் துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரத்தினம் உட்பட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# உலக நாடக நாளில் மஹாகவி காளிதாசர்!





(ஹஸ்பர் ஏ.எச் )

உலக நாடக தினத்தை முன்னிட்டு மார்ச் 27ஆம், 28ஆம் திகதிகளில் "மஹாகவி காளிதாசர்" எனும் நாடகம் மேடையேறியது.

நாடக தினத்தை முன்னிட்டுப் பல கலைக்கழகங்களும் நாடக நிறுவனங்களும் பல நாடகங்களை மேடையேற்றின. அதையொட்டிய பல நிகழ்வுகளையும் நிகழ்த்தியுள்ளன.

அது போல் , களரி அரங்கக் கலை நிதியத்தின் தயாரிப்பிலே திருகோணமலையிலுள்ள உவர்மலை தேசிய பாடசாலையில் உலக நாடக தினத்தை முன்னிட்டு மஹாகவி காளிதாசர் ஆற்றுகையானது மேடையேறியது.

மஹாகவி காளிதாசர் நாடகத்தில் இலங்கையின் கிழக்கு, வடக்கு, மலையகம் எனப் பல பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# இராகலைப் பிரதேச மக்களை சந்தித்த ஜீவன் தொண்டமான்





(ஆ.ரமேஸ்)

இராகலை பிரதேச தோட்டப் பகுதிகளுக்கு விசேட கள விஜயத்தை மேற்கொண்ட நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளருமான ஜீவன் தொண்டமான் அங்கு பிரதேச மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கள விஜயத்தின் போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸின் தலைவருமான மருதபாண்டி ராமேஸ்வரன் உட்பட காங்கிரஸின் முக்கியஸ்தர்களான சிரேஷ்ட சட்டத்தரணி பி.இராஜதுரை, எ.பி. சக்திவேல், வேலு யோகராஜ் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதிய அதிகாரிகள், தோட்ட அதிகாரிகள் எனப் பலரும் கலந்துக்கொண்டனர்.

இதன் போது இராகலை டெல்மார் தோட்டத்துக்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் அத்தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பிணக்குகள் தொடர்பில் பேச்சு நடத்தி தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

இதையடுத்து இராகலைக்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் இராகலை இ.தொ. கா. காரியாலயத்தில் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு குறைகளைக் கேட்டறிந்தார்.

பின் இயற்கை அர்த்தத்தில் பாதிக்கப்பட்ட இராகலை மேற்பிரிவு மக்களுக்கு கட்டியமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் கந்தப்பளை பார்க் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளை பார்வையிட கள விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் அங்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் குறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அத்துடன் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான உட்கட்டமைப்பு குறைகளை தீர்க்க அபிவிருத்திகளை துரிதப்படுத்தி விரைவில் அந்த வீடுகளைப் பயனாளிகளுக்குக் கையளிப்பது தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடினார்.

# யானையால் பாதிக்கப்பட்டவருக்கு சம்மாந்துறையில் நிதி வழங்கல்

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மலையடிக் கிராமம் -04 ஐச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் வீரச்சோலையில் வைத்து யானை தாக்கு தலுக்கு உட்பட்டு காயமடைந்தார்.

அவருக்கான மருத்துவ நிவாரண கொடுப்பனவு நேற்று (04) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை, மற்றும் பணிப்புரைக்கமைய கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம். தாஸீமால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தி யோகத்தர் எம்.எஸ் அஸாருதீனும் கலந்து கொண்டார்.





# விவசாயிகள் வாங்குவோராக இருக்காது கொடுப்பவர்களாக மாறுதல் வேண்டும்

## விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு

(வாஸ் கூஞ்ஞ)

சிறந்த விவசாயிகளாக திகழும் நீங்கள் வாங்குபவர்களாக இருக்காது கொடுப்பவர்களாக மாற வேண்டும். மிளகாய செய்கையில் எவ்வாறு முன்னேற்றம் அடையலாம் என்பதை உங்களுக்கு சிறந்த வழிகாட்டல் தற்பொழுது தரப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மீள்குடியேறி வாழும் நான்கு கிராமபுறங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 250 மிளகாய் செய்கை உற்பத்தியாளர்களுக்கு இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட உயர்தர வர்க்கம் கொண்ட மிளகாய் விதைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த வாரம் இறுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு இங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நான் நீண்ட காலமாகச் சேவையாற்றி வருவதால் குறிப்பிட்ட இந்த கிராம பகுதிகளில் பயிர் செய்கை தொடர்பாக எந்த திட்டங்கள் வந்தாலும் நான் முதலில் முன்மொழிவது மிளகாய் பயிர் செய்கையையே.

மிளகாய் ஒரு பழப்பயிர். இதை செய்யும்போது கூடிய வருமானத்தை பெறக்கூடிய வாயப்புக்கள் அதிகம். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் முன்னைநாள் அமைச்சர் இந்த பகுதிகளில் மிளகாய் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க வேண்டும் என திட்டம் தீட்டியிருந்தார்.

இங்குள்ள நீங்கள் கல்பிட்டியில் இருந்தபொழுது மிளகாய் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தமை எனக்குத் தெரியும். இதனால் உங்களுக்கு நல்ல அனுபவமும் இருக்கும் என்பதும் வெளிச்சம்.

நாம் வாங்குபவர்களாக இருக்காது கொடுப்பவர்களாக மாற வேண்டும். நீங்கள் மிளகாய செய்கையில் எவ்வாறு முன்னேற்றம் அடையலாம் என்பதை உங்களுக்கு சிறந்த வழிகாட்டல் தற்பொழுது தரப்பட்டுள்ளது.

உங்களுக்கு இதற்கு மேலாகவும் உங்கள் பயிர் செய்கை தொடர்பாக எது தேவையானாலும் எம்மை நீங்கள் நாடலாம்.

இன்றைய இந்த பயனாளிகளின் நலன் நோக்கி விவசாய போதனாசிரியர்களை அடிக்கடி இங்கு அனுப்பி உங்களால் முன்னெடுக்கப்படும் இந்த செய்கையில் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் வாரம் ஒருமுறையாவது உங்களுக்கு விவசாயம் தொடர்பாக பயிற்சி வகுப்புக்களும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார்.

# கிழக்கு மாகாண கல்வி சாரா ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டது



(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் காணப்படும் கல்வி சாரா ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப்பின் நேரடி தலையீட்டைத் தொடர்ந்து, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகளின் ஆளணி விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் தலையீடு மற்றும் முறையான பதிலீடுகள் எதுவும் இன்றியும் இடம்பெற்ற இடமாற்றம் குறித்து கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நேரடி கவனத்துக்கு கொண்டுவரும் வகையில் கடந்த திங்கட்கிழமை (01) கல்வி அமைச்சுக்கு விஜயம் செய்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப்பின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் மேற்படி இடமாற்றம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# வாழைச்சேனை - பேத்தாழையில் அறநெறிக் கல்வி விழிப்புணர்வு

(பழுவூரான்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை, வழிகாட்டலுக்கமைவாக கோறளைப் பற்றுப் பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பேத்தாழை ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலையும், ஸ்ரீமுருகன் ஆலயமும் இணைந்து நடத்திய காரைக்கால் அம்மையார் குருபூசையும், அறநெறிக் கல்வி விழிப்புணர்வு ஆன்மீக எழுச்சி ஊர்வலமும் அண்மையில் பேத்தாழை விபுலானந்தா கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் அறநெறிப்பாடசாலையின் அதிபர் க.தனுஷன் தலைமையில் நடைபெற்றது.

பேத்தாழை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான காரைக்கால் அம்மையாரின் திருவுருவப்படம் தாங்கிய ஆன்மீக எழுச்சி ஊர்வலம் பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தை வந்தடைந்து.

இதன்போது விசேட பூசையும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும், காரைக்கால் அம்மையாரைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும், அறநெறிப் பாடசாலைகளுக்கிடையிலான சைவசமய பொது அறிவு வினாவிடை போட்டிகளும் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து ஊர்வல நிகழ்விலும், கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றிய மாணவர்கள், ஆசிரியர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பேத்தாழை ஸ்ரீ முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி.டினேந்திரராஜா சர்மா, கோறளைப் பற்று பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிருந்தாபன், புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலய ஒய்வு நிலை அதிபர் திருமதி அருந்ததி, புதுக்குடியிருப்பு சேக்கிழார் அறநெறிப் பாடசாலை அதிபர் சீ.நாகராசா, பேத்தாழை - வாழைச்சேனை வீரையடி விநாயகர் அறநெறிப்பாடசாலை அதிபர் ச.கார்த்தீபன், கண்ணகிபுரம் முத்தமிழருவி அறநெறிப்பாடசாலை அதிபர் ச.பிரதீபன், கல்குடா நாமகள் அறநெறிப் பாடசாலை அதிபர் க.உதயகுமார், நாசிவன்தீவு திருமூலர் அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி க.மகேஸ்வரி, மருதநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலர் அறநெறிப்பாடசாலை அதிபர் திருமதி உ.உருத்திரராணி, கருங்காலிச் சோலை ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி பி.கிருஷாந்தி, வாழைச்சேனை ஸ்ரீகைலாய பிள்ளையார் அறநெறிப்பாட சாலை அதிபர் ர.வர்ஷிக்கா, பேத்தாழை ஸ்ரீ முருகன் ஆலய தலைவர் த.சசிகு மார் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர் கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு தேசிய ரீதியில் மகத்தான வெற்றி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் கொழும்பில் நடைபெற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய "அறிவுச் சுரங்கம்" போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

# 'விழித்தெழு' சர்வதேச விருது பெறும் ஸ்ரீ லங்கா பென் கிளப் ஆளுமைகள்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கனடாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் "விழித்தெழு" பெண்ணே சர்வதேச அமைப்பின் தமிழ்ப் பெண் ஆளுமைகளின் சர்வ தேச விருது விழா - 2024 எதிர்வரும் 08 ஆம் திகதி திங்கட்கிழமை கண்டி கோல்டன் க்ரவுன் ஹோட்டலில் நடை பெறவுள்ளது.

இந்த முறை ஸ்ரீலங்கா பென் கிளப்பின் அங்கத்தவர்கள் நான்கு பேருக்கு "விழித்தெழு" சர்வதேச விருது கிடைக்கவுள்ளது.

ஸ்ரீலங்கா பென் கிளப்பின் ஸ்தாபகத் தலைவி இலக்கிய வித்தகர் சம் மாந்துறை மஷூறா, உப தலைவி திருகோணமலை மர்ளியா சக்காப், நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர் கண்டி கலாபூஷணம் அறபா மன்சூர், சிரேஷ்ட உறுப்பினர் கலாபூஷணம் இஸ்மா லிஹா ராஜா ஆகியோரே இவ் விருதுக்காகத் தெரிவாகியுள்ள னர்.

மர்ளியா சக்காப் கல்வித் துறைக் காகவும் ஏனைய மூவரும் இலக்கி யத்துறைக்காவும் விருது பெறவுள்ள னர்.

# சம்மாந்துறை ஊடக மையத்தை சந்தித்த கப்சோ நிறுவனத்தினர்

**(தில்சாத் பர்வீஸ் )**

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட சமூக ஊடக ஆர் வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந்துறை ஊடக மையத்தின் உறுப்பினர்களுக்கும் கப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப் பாளர் எ.ஜே காமில் இம்டாட்டுக்கும் இடையிலான சந்திப்பு சம்மாந்துறையில் உள்ள கப்சோ நிறுவனத்தின் அலுவ லகத்தில் நேற்று முன்தினம் (03) நடை பெற்றது.

இதன் போது கப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் எ.ஜே காமில் இம்டாட் கருத்து தெரிவிக்கையில்,

ஊரின் சில முக்கியமான வரலாறு கள் மறைந்துள்ளன. அவற்றை ஆவணப்படுத்துவதற்கு ஆலோசனை கள் வழங்கப்பட்டன. அதுமட்டுமின்றி சம்மாந்துறை ஊடக மையத்தை எதிர் காலத்தில் எப்படி எடுத்துச் செல்ல வேண்டிய செயற்பாடுகள் பற்றியும் பேசப்பட்டது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை ஊடக மையத்தின் தலைவர் ஏ.பி. இம்ரான், செயலாளர் ஏ.எம் ஹறூஸ், உப செயலாளர் ஐ.எல்.எம். நாசிம், அமைப் பாளர் ஷாதிர் ஏ ஜப்பார் மற்றும் ஊடக மையத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# இலங்கைச் சிறையில் உள்ளவர்களை விடுவிக்க வலியுறுத்தி வேலைநிறுத்தம்

## காரைக்காலில் மீனவர்கள் போராட்டம்

இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் மற்றும் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்க வலியுறுத்தி காரைக்கால் மாவட்ட மீனவர்கள் நேற்று தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை, எல்லைதாண்டி வந்தனர் என கூறி இலங்கைகடற்படையினர் அடிக்கடி கைதுசெய்கின்றனர். மேலும், அவர்களது படகுகளை பறிமுதல் செய்கின்றனர். பின்னர், மத்திய, மாநில அரசுகள் எடுக்கும் நடவடிக்கையை தொடர்ந்து, மீனவர்கள் விடுதலைசெய்யப்படுகின்றனர்.

ஆனால், படகுகளில் செல்லும் மீனவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்படுவதுடன், படகுகளையும் இலங்கை அரசு விடுவிப்பதில்லை.

தற்போது 6 மாத சிறை தண்டனை பெற்று இலங்கை சிறையில் உள்ள காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 2 மீனவர்களையும், 4 படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லையேல் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் மக்களவைத் தேர்தல் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் காரைக்கால் மாவட்ட மீனவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தனர்.

ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 11 மீனவக் கிராம பஞ்சாயத்தார்களின் ஆலோசனைக் கூட்டம் காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், சிறையில் உள்ள மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்குவது என்று முடிவெடுக்கப் பட்டது.

மேலும், 2 நாள்களுக்குள் மீனவர்கள் விடுதலை செய்யப்படா விட்டால், தங்களின் விசைப்படகுகளில் கறுப்புக் கொடியை ஏற்றவும் முடிவு செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து, மீனவர்கள் நேற்று தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர். இதனால் படகுகள் கடலுக்குச் செல்லாமல், கரையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



# உதயநிதி விரைவில் சிறைக்கு செல்வார்!

## பழனிசாமி தகவல்

உதயநிதி விரைவில் சிறைக்கு செல்வார் என அ.தி.மு.க. பொது செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நீலகிரி தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் த.லோகேஷ் தமிழ்செல்வனுக்கு ஆதரவாக உதகை, கோவை மாவட்டம் காரமடை ஆகிய இடங்களில் அ.தி.மு.க. பொது செயலாளர் பழனிசாமி நேற்று பிரச்சாரம் செய்தார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“தி.மு.க. ஆட்சியில் தமிழகம் முழுவதும் போதைப் பொருள்களின் விற்பனை அதிகரித்திருக்கிறது. போதைப் பொருள்களை விற்பனை செய்வதே தி.மு.க. நிர்வாகிகள்தான்.

போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தில் முக்கிய நபரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதல்வர் மற்றும் அவரது மகன் ஆகியோருடன் அந்த நபர் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார். போதைப் பொருள் கடத்தல் நபருடன் நெருக்கமாக உள்ள உதயநிதி விரைவில் சிறைக்கு செல்வார். அது தேர்தல் நடப்பதற்குள்ளேயே நடக்கும்.

அ.தி.மு.க. ஆட்சியைப் பார்த்து இருண்ட ஆட்சி என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார். தி.மு.கவின் 3 ஆண்டு கால ஆட்சி மக்கள் விரோத ஆட்சி. மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுள்ளது.

2010 இல் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டது. அப்போது காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்தது தி.மு.க. இந்த மக்களவைத் தேர்தல், வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்க வேண்டும். அ.தி.மு.கவை முடக்க சதி செய்ய முன்பு எட்டப்பர்கள் இருந்தார்கள். இன்று அவர்கள் முகவரி தெரியாமல் போய்விட்டனர்.” – என்றார்.

# காஞ்சிபுரம் தொகுதியில் மும்முனைப் போட்டி

காஞ்சிபுரம் மக்களவைத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க, பா.ம.க. இடையே மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு ஈடு கொடுத்து நாம் தமிழர் கட்சியினரும் பல்வேறு இடங்களில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதி தமிழ்நாட்டில் உள்ள 39 மக்களவைத் தொகுதிகளில் 6 ஆவது தொகுதி யாகும். இந்தத் தொகுதிபட்டியலினத்தைச் சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தனித் தொகுதி. கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தொகுதி மறு சீரமைப்பின்போது இந்தத் தொகுதி புதிதாக உருவாக்கப்பட்டது.

செங்கல்பட்டு மக்களவைத் தொகுதியில் இடம் பெற்றிருந்த திருப்போரூர், செங்கல்பட்டு, மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகியவை இந்தத் தொகுதியில் இணைக்கப்பட்டன.

தற்போது இந்த மக்களவைத் தொகுதியில் காஞ்சிபுரம், உத்திரமேரூர், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர் ஆகிய6 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. மொத்தம் 17லட்சத்து 48 ஆயிரத்து 866 வாக்காளர்கள் உள்ளனர்.

இந்தத் தொகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க.



கூட்டணியில் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட பெ.விஸ்வநாதன் வெற்றி பெற்றார். அதன் பின்னர் 2014 ஆம் ஆண்டுதேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட மரகதம் குமரவேல் வெற்றிபெற்றார். 2019 ஆம் ஆண்டு தேர்தலில் தற்போதைய மக்களவை உறுப்பினர் க.செல்வம் வெற்றி பெற்றுள்ளார்.

மத்திய அரசு தமிழகத்துக்கு தேவையான நிதியை தருவதில்லை என்ற குற்றச்சாட்டை அவ்வப்போது முன்வைத்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். இவருக்கு ஆதரவாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் செய்துள்ளார்.

கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இவருக்கு ஆதரவாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளில் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அளவுக்கு மக்கள் பிரச்சினைகளில் இவர் போதிய கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு பல்வேறு கட்சிகளால் எழுப்பப்படுகிறது.

காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ள நிலையில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

தேர்தல் நெருங்கும் நேரத்தில் முக்கிய தலைவர்களும் இந்தத் தொகுதி-க்கு படையெடுக்க உள்ளனர். கடைசி நேர தேர்தல்யுக்தியில் யார் முன் செல்கிறார்கள் என்பதை அரசியல் நோக்குநர்களும், பொதுமக்களும் ஆர்வமுடன் பார்த்து வருகின்றனர்.

# பலமுறை தோல்வியடைந்தும் துவண்டுபோய்விடவில்லை

## சீமான் தெரிவிப்பு

மத்திய சென்னை நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பிரச்சாரத்தில் கலந்து கொண்ட கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பலமுறை தோல்வியடைந்தும் நாங்கள் துவண்டு விடவில்லை என தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகருக்குட்பட்ட மத்திய சென்னை தொகுதியில் மக்களவை தேர்தலையொட்டி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் இரா.கார்த்திகேயன் சிந்தாதிரிப்பேட்டையில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அவருக்கு ஆதரவாக கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பிரச்சாரத்தில் பங்கேற்றார்.

முன்னதாக சிந்தாதிரிப்பேட்டையில் நடந்த பிரச்சாரத்தின்போது சீமான் உரையாற்றுகையில்,

“மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி, முதல்வராக எப்போது பொறுப்பேற்றுக் கொண்டாரோ அன்றில் இருந்து அநாகரீக அரசியல், ஊழல், சூழ்ச்சி அரசியல் போன்றவை தமிழகத்தில் ஆரம்பமாகிவிட்டன. அன்றில் இருந்து ஊழல், லஞ்சம் தேசியமயமாக்கப்பட்டது. வாக்குக்கு காசு கொடுப்பதை ஒரு வாழ்க்கை முறையாக மரபாக்கியதும் இவர்கள் தான்.

எந்த திட்டத்துக்கும் காசு இல்லை, நிதி இல்லை என்று கைவிரிக்கும் தி.மு.க. அரசு, ஓட்டுக்காக மட்டும் எப்படி செலவு செய்கிறது? இவர்களுக்கு இடையே மண்ணுக்கும், மக்களுக்குமான அரசியலை முன்வைக்கிறது நாம் தமிழர் கட்சி. நாங்கள் வாக்கை கேட்டு மக்கள் முன்வந்து நிற்கவில்லை.

வருங்கால தலைமுறை பிள்ளைகளின் வாழ்க்கையை கேட்டு வந்து நிற்கிறோம். எங்களுக்கு முதன்மையானது வாக்கு அல்ல. நாட்டின் உரிமை, மக்களின் நலனை காக்கவே தேர்தலில் நிற்கிறோம். இவற்றை மக்கள் உணர்ந்தாலே போதுமானது. பலமுறை தேர்தலில் தோல்வியடைந்துள்ளோம்.



ஆனால் துவண்டு விடவில்லை. வாக்கு என்பது வலிமைமிக்க ஆயுதம். இதனை அநீதிக்கு எதிராக உபயோகிக்க வேண்டும். “ – என்றார்.






# இந்த வாரம் பிரித்தானியாவை தாக்கவுள்ளது கேத்லீன் புயல்

இந்த வார இறுதியில் பிரித்தானியாவை கேத்லீன் என பெயரிடப்பட்டுள்ள புயல் வலிமையாக தாக்க இருப்பதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கேத்லீன் புயலால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில், கனத்த மழை, பனி மற்றும் ஆபத்தான பலத்த காற்று வீசக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மஞ்சள் வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா மற்றும் ஸ்காட்லாந்தின் மேற்கு கடற்கரையோர பகுதிகளில் நாளை 70 மை வேகத்தை மீறிய புயல் காற்று எதிர்பார்க்கப்படுகிறது.

பலத்த காற்று பயண இடையூறுகளுக்கு குறிப்பிடத்தக்க அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனத்த மழை மற்றும் உள்ளூர் வெள்ளப்பெருக்கின் சாத்தியத்துடன், குறிப்பாக மத்திய ஸ்காட்லாந்தில் வெள்ளிக்கிழமை காலையில் இருந்து மஞ்சள் வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேத்லீன் புயலால் கார்க், கெர்ரி, கால்வே மற்றும் மாயோ ஆகிய பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மனிதாபிமானச் சட்டங்களை இஸ்ரேல் மீறுவதாக அறிவிக்கவேண்டியேற்படும்

## பிரித்தானிய பிரதமர் எச்சரிக்கை





பாலஸ்தீன காசா பகுதிக்கான நிவாரண உதவிகளை தடுத்தால், சர்வதேச மனிதாபிமான சட்டங்களை இஸ்ரேல் மீறுவதாக அறிவிக்கவேண்டியேற்படும் என்று பிரித்தானிய பிரதமர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலின் பிரதமர் நெத்தன்யாகுடன் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலின்போதே பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

காசா பகுதிக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்புவதில் மாற்றங்களை செய்யாவிட்டால், சர்வதேச மனிதாபிமான சட்டத்தை இஸ்ரேல் மீறுவதாக தமது நாடு அறிவிக்க வேண்டியேற்படும் ரிஷி சுனக் எச்சரித்துள்ளார் என சர்வேத ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட மனிதாபினமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஏழு உதவிப் பணியாளர்களில் மூன்று பிரித்தானியர்களும் அடங்கியிருந்தமையை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் காசா பகுதிக்கு அதிகளவு நிவாரணப்பொருள்களை அனுப்புவதற்கு வழியேற்படுத்தப்படும் என்று நெத்தன்யாகு உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையில் காசாவில் மனித அவல நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து, இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனையை நிறுத்துமாறு அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் உள்ளூர் அமைப்புக்கள் தத்தமது அரசாங்கங்களிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

# சுற்றுலா பயணிகளை கவரும் தங்க முலாம் பூசப்பட்ட விடுதி





உலகின் முதல் தங்க முலாம் பூசப்பட்ட விடுதி வியட்நாமில் கட்டப்பட்டுள்ளது.

இந்த 6 நட்சத்திர விடுதி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள அதேவேளை பலகோடி வருமானத்தையும் ஈட்டி வருகிறது.

ஹனோய் கோல்டன் லேக் விடுதி என அழைக்கப்படும் இந்த தங்க விடுதி, கடந்த 2009ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் வியட்நாமில் இந்த தங்க முலாம் பூசப்பட்ட விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

வியட்நாமின் தலைநகர் ஹனோயில் உள்ள ஹனோய் கோல்டன் லேக் விடுதியின் வெளிப்புறம் மற்றும் உட்புறம் 24 கரட் தங்கத்தால் முலாம் பூசப்பட்டுள்ளது.

இது உலகின் முதல் தங்கமுலாம் பூசப்பட்ட விடுதியாக பெயரிடப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த டோல்ஸ் ஹனோய் கோல்டன் லேக் விடுதியில், விருந்தினர்களுக்கு, தங்கக் கோப்பையில் தேநீர் வழங்கப்படுகிறது.

அத்துடன், இந்த விடுதியில் உள்ள தட்டுகள், கரண்டிகள் உள்ளிட்ட அனைத்தும் தங்க முலாமிடப்பட்டுள்ளது. இங்குள்ள நீச்சல் குளம், மொட்டை மாடி, குளிக்கும் தண்ணீர் குழாய்கள் மற்றும் கழிவறை ஆகியவையும் தங்க முலாமிடப்பட்டுள்ளன.

இந்த விடுதியில் உள்ள நடைபாதை, சுவர், தளம் என சுமார் 54 ஆயிரம் அடி பரப்பு எல்லாமே தங்க முலாம் பூசியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதியில் சுமார் 25 தளங்கள் உள்ளன. அதில் மொத்தமாக 400 விருந்தினர் தங்கும் அறைகள் உள்ளன.

சாதாரண மக்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை செல்லும் இடமாக ஹனோய் கோல்டன் லேக் விடுதி கருதப்படுகிறது.

இந்த ஆடம்பர தங்க விடுதியில் ஒரு நாள் தங்குவதற்கு 250 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கம் மன அழுத்தத்தை குறைக்கும் என்று நம்பப்படும் நிலையில், இந்த விடுதி தங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீன எல்லையில் தரையிறக்கப்பட்ட இந்திய விமானப்படை ஹெலிக்கொப்டர்



இந்திய விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று சர்சைக்குரிய சீன எல்லையான லடாக்கில் திடீரென தரையிறக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இவ்வாறு திடீரென ஹெலிக்கொப்டர் தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய விமானப்படைக்கு சொந்தமான அப்பாச்சி ரக ஹெலிக் கொப்டர்களில் விமானப்படை வீரர்கள் வழக்கமான பயிற்சி மேற்கொண்டனர். அப்போது ஒரு ஹெலிக்கொப்டரில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கட்டுப்பாட்டு அறையில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஹெலிக்கொப்டர் லடாக்கில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

அதில் பயணித்த 2 விமான ஓட்டிகளுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற விமானப்படை அதிகாரிகள், ஹெலிகொப்டர் திடீரென தரையிறக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தப்படும் என தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் - 5

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 05/04/2024

## எரிபொருளின் விலை ஒரே இரவில் உயர்வு!

ஒன்ராரியோ, ஏப்ரல் 05

டொரன்டோ பெருநகரப் பகுதியில் ஒரு லீற்றர் வழக்கமான எரிபொருளின் சராசரி விலை ஒரே இரவில் மேலும் இரண்டு சதங்கள் C2

# கியூபெக்கிலும் ஒன்ராரியோவிலும் வசந்தகாலப் புயலினால் பாதிப்பு!

## 193,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது



கியூபெக், ஏப்ரல் 05

கியூபெக் மற்றும் ஒன்ராரியோவில் வியாழக்கிழமை வீசிய வசந்தகால புயலினால், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மின்சார விநியோகம் தடைப்பட்டது.

இதனால், பாடசாலைகள் பலவும் மூடப்பட்டன.

இந்தப் புயலினால் மொன்றியல் பகுதியில் சுமார் 163,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கடும் புயலினால் மரங்கள் வீழ்ந்தமையினால் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஹைட்ரோ கியூபெக் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒன்ராரியோ மாகாணத்தில் 30,000 வீடுகளுக்கு மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது.

இதேசமயம், இந்த சீரற்ற வானிலை காரணமாக ஒன்ராரியோ மற்றும் கியூபெக் பகுதிகளில் பல விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டமையுடன், சில விமான சேவைகள் தாமதமாக இடம்பெற்றன.

## அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார் சார்லி எங்கஸ்



ஒன்ராரியோ, ஏப்ரல் 05

புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சார்லி எங்கஸ் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போகின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கு ஒன்ராரியோ தேர்தல் தொகுதியில் கடந்த 20 வருடங்களாக நாடாளுமன்றத்தில் அங்கம் வசிக்கும் 61 வயதான எங்கஸ், அடுத்து வரும் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ள எங்கஸ், வியாழக்கிழமை மாலை கன்சர்வேட்டிவ் கட்சியினர் இந்த அறிவிப்பு குறித்துக் கொண்டாடுவார்கள் என நகைச்சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு எதிராக தமது அரசியல் பிரசாரங்களை நிறுத்தப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். C2

## நிரந்தரக் குடியுரிமை விண்ணப்பத்துக்கான கட்டணங்களை உயர்த்துகின்றது கனடா!



கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு, 2024ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல், குறிப்பிட்ட நிரந்தரக் குடியிருப்பு (PR) கட்டணங்களை அதிகரிக்க இருப்பதாக அறிவித்துள்ளது .

கனடாவின் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிமுறைகளின்படி (IRPR) இந்தக் கட்டண உயர்வு அறிமுகப்படுத்தப்படுவதாக கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கோரி விண்ணப்பிப்பவர் மற்றும் அவரது கணவன் அல்லது மனைவிக்கான கட்டணம் 515 கனேடிய டொலர்களிலிருந்து 575 டொலர்களாக C2



# பிரிட்டிஷ் கொலம்பியாபூர்வீகக் குடிகளுடன் ஏழு மில்லியன் டொலர்கள் உடன்படிக்கை!

## இழப்பீட்டு நிவாரணமாக கனடா அரசு வழங்குகின்றது

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 05

கனடிய அரசாங்கத்திற்கும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பூர்வீகக் குடிகளுக்கும் இடையில் 7 மில்லியன் டொலர்கள் பெறுமதியான உடன்படிக்கை ஒன்று நேற்று ஏப்ரல் 4ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

1942ஆம் ஆண்டில் இடம்பெற்ற துன்பியல் சம்பவத்திற்கான இழப்பீடாக இந்த நிதி வழங்கப்படுகின்றது.

பூர்வீகக் குடிகள் நலன்பேண் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி மற்றும் பூர்வீகக் குடிகளின் தலைவர் ஜோ பியர் ஜூனியர் ஆகியோருக்கு இடையில் இந்த இணக்கம் எட்டப்பட்டது.

பல தசாப்தங்கள் நீடித்த காலனித்துவ கொள்கைகள் நிலம் மற்றும் வளங்களின் மறுப்பு மற்றும் கையகப்படுத்தலுக்கு வழிகோலியமையால் பூர்வீகக் குடிகளுக்கும், பூர்வீகக் குடிகள் அல்லாதவர்களுக்கும் இடையில் சமூக-பொருளாதார இடைவெளிகள் காணப்படுவதாக அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பூர்வீகக் குடிகளின் மேம்பாட்டில் ஒரு சிறந்த பங்காளராக இருக்க விரும்பும் அரசாங்கத்தின் முயற்சியே இந்த இணக்கப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1942ஆம் ஆண்டில் கனடிய அரசாங்கத்தால் அக்கம் கூட்டெனே பூர்வீகக் குடிகளின் மரங்கள் கையகப்படுத்தப்பட்டமை மற்றும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டமையின் காரணமாக, பூர்வீகக் குடிகளுக்கு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

---

### நிரந்தர...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர இருக்கிறது.

பெடரல் திறன்மிகுப் பணியாளர்கள், மாகாண நாமினி திட்டம், கியூபெக் திறன்மிகுப் பணியாளர் திட்டம், அட்லாண்டிக் புலம்பெயர்தல் வகுப்பு முதலான திட்டங்களுக்கு விண்ணப்பிப்பவருக்கான கட்டணம் 850 டொலர்களிலிருந்து 950 டொலர்களாகவும், விண்ணப்பிப்பவரின் கணவன் அல்லது மனைவிக்கான கட்டணம் 850 டொலர்களிலிருந்து 950 டொலர்களாகவும் அதிகரிக்க உள்ளது.

இந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான விண்ணப்பம் 230 டொலர்களிலிருந்து 260 டொலர்களாக உயர இருக்கிறது.

### அரசியலில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இசைப் பின்னணியைக் கொண்டவரும், 2004ஆம் ஆண்டில் முதன் முறையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான எங்கஸ், பூர்வீகக் குடிகளின் நலன்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் ஒருவராக இருக்கின்றார்.

லிபரல் அரசாங்கத்தின் உருவாக்கத்திற்கு காரணமான புதிய ஜனநாயகக் கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என இதுவரை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கெரோல் ஹியூக்ஸ் மற்றும் ரேச்சல் பிளேனி ஆகியோர் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

### எரிபொருளின்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்து இப்போது 1.649 டொலர்களாக உள்ளது.

இது 2024ல் இதுவரை எட்டப்பட்ட எரிவாயுவின் அதிகபட்ச விலையாகும். இது கடந்த ஆண்டு இந்த நேரத்தில் இருந்ததை விட லீற்றர் ஒன்றுக்கு 10 சதவீதம் அதிகம்.

குளிர்காலத்தில் இருந்து கோடை காலத்திற்கு எரிபொருள் கலவைகளுக்கு மாற்றும்போது ஒரு லீற்றர் எரிபொருளின் விலை 10 முதல் 12 சதங்கள் வரை அதிகரிப்பதைக் காணலாம்.

ஜனவரியில் ஆண்டுக்கு ஆண்டு 4 சதவீதம் சரிவுக்குப் பிறகு பெப்ரவரியில் மாதத்திற்கு நான்கு சதவீதம் பெற்றோல் விலை அதிகரித்துள்ளது.

தொடர்ச்சியான செலவு அதிகரிப்பு எண்ணெய் விலையில் பிரதிபலிப்பதாகவும், மேலும் இது கார்பன் வரியால் பாதிக்கப்படுவதாகவும் கனடியன் மலிவு எரிசக்திக்கான குழுமத்தின் தலைவர் விமர்சித்துள்ளார்.



# தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு: பல்வேறு விசாரணைகள் முன்னெடுப்பு!

ஒன்ராரியோ, ஏப்ரல் 05

கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில் பல்வேறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன கனடிய தேசிய பொலிஸ் ஆணையாளர் மைக் டியுஹீம் தெரிவித்துள்ளார்.

எனினும், விசாரணைகளின் நேர்மைத் தன்மை, தனிப்பட்ட கரிசனைகள் மற்றும் பொது பாதுகாப்பு என்பவற்றினை கருத்தில் கொண்டு, விசாரணைகளின் எண்ணிக்கை அல்லது தன்மை தொடர்பில் தகவல்களை வெளியிட விரும்பவில்லை என டியுஹீம் குறிப்பிட்டுள்ளார்.

கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பில் விசாரணை செய்து வரும் மத்திய குழுவின் முன்னிலையாகிய போதே, டியுஹீம் இந்த விடயங்களைக் கூறியுள்ளார்.

2019 மற்றும் 2021 தேர்தல்களில், சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் ஏனைய நாடுகளின் தலையீடு தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# வாடகைப் பாதுகாப்பு நிதியாக 1.5 பில்லியன் டொலர்கள் நிதி

## ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் வலியுறுத்து

ஒன்ராரியோ, ஏப்ரல் 05

இலாப நோக்கற்ற நிறுவனங்கள் கனடா முழுவதும் அதிக வாடகை அலகுகளைப் பெறுவதற்கும் அவை மலிவு விலையில் இருப்பதை உறுதி செய்வதற்கும் உதவுவதாக 1.5 பில்லியன் டொலர்கள் வீடமைப்பு நிதியை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று ஏப்ரல் 4ஆம் திகதி அறிவித்தார்.

புதிய கனடா வாடகைப் பாதுகாப்பு நிதியானது ஏப்ரல் 16ஆம் திகதி சமர்பிக்கப்படவுள்ள மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையவுள்ளது.

இந்த நிதியானது 1 பில்லியன் டொலர்கள் கடனையும், இலாப நோக்கற்ற மற்றும் பிற கூட்டாளர்களுக்கு மலிவு விலையில் வாடகை அலகுகளைப் பெறுவதற்கு 470 மில்லியன் டொலர்கள் பங்களிப்பையும் வழங்கும்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் தற்போதுள்ள வாடகை பாதுகாப்பு நிதி இந்த முயற்சிக்கு ஒரு நல்ல 'கருத்துக்கான ஆதாரம்' என்று வின்னிபெக்கில் செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரூடோ கூறினார்.

# பிரம்டன் சூட்டுச் சம்பவத்துடன் பொலிஸ் அதிகாரிக்குத் தொடர்பு?



ஒன்ராரியோ,ஏப்ரல்05

பிரம்டனில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட ஒரு குற்றம் நடந்த இடத்தில் டொரன்டோ பொலிஸ் சேவையின் அதிகாரி ஒருவரின் துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஏப்ரல் 4ஆம் திகதி டொரன்டோ பொலிஸ் சேவை வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில், டிசம்பர் 9, 2023 அன்று ஷெருதர்ஃபோர்ட் ரோடு சவுத் மற்றும் கிளார்க் பவுல்வார்டுக்கு அருகிலுள்ள ஒரு வர்த்தக வளாகத்தில் நடந்த சம்பவம் குறித்து பீல் பிராந்திய பொலிஸார் நடத்திய விசாரணையில் இருந்து குற்றச்சாட்டுகள் வந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு சந்தேக நபர்கள் அந்த பகுதிக்கு வந்தனர். ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

எனினும், இந்த சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சிறிது நேரம் கழித்து, அதிகாரிகள் பதிலளித்து சந்தேக நபரைப் பிடித்துள்ளனர்.

அவர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

# மழை நீருக்காக வரி விதிக்கப்பட மாட்டாது



## டொரன்டோ மேயர் விளக்கம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 05

மழைக்கு வரி விதிக்கப்படாது என டொரன்டோ மேயர் ஒலிவியா சோவ் தெரிவித்துள்ளார்.

வீட்டு உரிமையாளர்களுக்கு மழை நீருக்காக வரி விதிக்கப்படலாம் என கடந்த வாரத்தில் செய்தி ஒன்று வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் தெளிவூட்டும் போதே, மேயர் சோவ் இதனைத் தெரிவித்துள்ளார்.

எக்ஸ் சமூக ஊடகத்தில், இது குறித்து பதிவிட்டுள்ள மேயர் சோவ், எக்ஸ் தளத்தில் வெளியாகும் போலிச் செய்திகளை நம்பி ஏமாற்றமடைய வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

மழையில் நனைந்து கொண்டு இந்த ஒளிப்பதிவினை அவர் பதிவு செய்துள்ளார்.

# பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தின் போது பொலிஸ் குதிரையைத் தாக்கிய பெண்மணி

## படத்தை வெளியிட்டு பொலிஸார் தேடுகின்றனர்

ஒன்ராரியோ, ஏப்ரல் 5

கடந்த வார இறுதியில் டொரன்டோவின் டவுன்டவுன் பகுதியில் இடம்பெற்ற பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தின் போது, பொலிஸ் குதிரையின் மீது கொடிக்கம்பத்தால் தாக்கிய போராட்டக்காரரின் படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை போராட்டம் இடம்பெற்ற போது கூட்டத்தை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குதிரையைத் தாக்கிய அந்தப் பெண்மணி உடனடியாகவே சம்பவ இடத்தை விட்டுச் சென்றுவிட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், இந்தச் சம்பவத்தின் போது பொலிஸ் குதிரைக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 50-60 வயது மதிக்கத்தக்க இந்த பெண்மணியை அடையாளங் காண உதவுமாறு, படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார் கோரியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் போது பொலிஸார் பலரைக் கைது செய்துள்ளனர்.




# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week


### till April 7th

LOWEST PRICE LB 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Small Onion

LOWEST PRICE LB 1.49$ Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Blue Fish

LOWEST PRICE 6.99$ Only at GUNAAM'S SUPER MARKET




ஊர் கோழி

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE LB 5.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சுறா fish

## இந்த வாரம் Gunaam's super market தரும் Super Deal

| | | |
|---|---|---|
| Harischandra Pappadam | - | $1.00 |
| MR.Goudas Table Salt | - | $1.00 |
| MR.Goudas Sea Salt | - | $1.49 |
| Blue Sea Tin Fish | - | $1.99 |
| Baba Uppuma mix | - | $2.99 |
| Chocolate Swiss Roll | - | $3.99 |
| 200g Tamarind 5for | - | $5.00 |
| Nestum Seriyal | - | $5.99 |
| Kott mee Noodles 6for | - | $5.99 |
| Raigam Noodles 2for | - | $5.00 |
| 7lb Brown Sugar | - | $8.99 |
| 3lt MR.Goudas Sunflower oil | - | $8.99 |
| Maharaja Rice Flour | - | $8.99 |
| Niru அவித்த மா | - | $8.99 |
| AROY–D Coconut Milk Tin 4for | - | $10.00 |
| MR.Goudas Coconut Milk Powder 3for | - | $10.00 |
| Niru Tin Fish 4for | - | $10.00 |
| 900g maggi Coconut Powder | - | $11.99 |
| Maharaja Curry Powder | - | 11.99 |

| | | |
|---|---|---|
| Maharaja Basmati Rice | - | $13.99 |
| EggPlant | - | $1.49lb |
| Drumstick | - | $4.99lb |
| Small Onion | - | 4.99lb |
| Rasavalli | - | $5.99lb |
| Karunayam | - | $4.99lb |
| Super deal gift mysoor Daal | - | $1.00 |

### Fish Market Special Sale

| | | |
|---|---|---|
| ஊர்க்கோழி | - | $6.99 |
| Ceylon விளைமீன் | - | $7.99lb |
| Blue fish | - | $3.99lb |
| இறால் | - | $3.99lb |
| சுறா Fish | - | $5.99lb |
| திரளி | - | $5.99lb |
| Ceylon பாரை | - | $8.99lb |
| Ceylon காரள் | - | $7.99lb |
| KO King fish | - | $7.99lb |
| KO Salmon fish | - | $7.99lb |
| Sea Breem fish | - | $7.99lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998